1972 பிப்ரவரி 1]

* *219* வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லாலாப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆய்வுக்கூடம் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளதா?

(இ) ஆமெனில், எப்போது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 6—1—1969-ல் அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டுவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

பள்ளி, கல்லூரிகளில் பாடமுறை

* *220* வினா.—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பள்ளி, கல்லூரி இவைகளில் பகுத்தறிவு, விஞ்ஞான வளர்ச்சியினை போதிக்கும் வகையிலும், அதற்கு முரணான கொள்கைகளைப் பரப்பாத வகையிலும் பாடமுறைகளைத் திருத்தியமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் தற்போது அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அறிவியலுக்கும் பகுத்தறிவுக்கும் ஒத்தவகையில் பாடபுத்தகங்கள் அமைய வேண்டுவதன் அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இம்மாதிரியான உயர்நிலைப் பள்ளிகளிலே அறிவியலுக்கும், பகுத்தறிவுக்கும் ஒத்த வகையில் பாடப்புத்தகங்கள் இருக்கக்கூடிய நேரத்தில், முக்கியமாக காலஞ்சென்ற தலைவர்கள் ஜீவா, பாரதிதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் போன்றவர்களின் பாடல்களும், அவர்களுடைய கருத்துக்களும் பள்ளிப் பாடப்புத்தகங்களில் வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தப் பாடப்புத்தகங்கள் தேர்ந்தெடுப்பதற்கான முறை ஓரளவுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தனிக்குழு அமைத்து, ஒவ்வொரு துறையிலும் உள்ள வல்லுநர்கள் அவற்றை ஆராய்ந்து தேர்ந்தெடுத்து பரிந்துரை செய்து வருகிறார்கள். பொதுவாகவே, நாட்டுக்கு உழைத்த தலைவர்கள், உலகுக்கு உழைத்த உத்தமர்கள், வரலாற்று சார்புமிக்கவர்கள், புலவர்கள், நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட வீரர்களின் வரலாறுகள் ஆகியவைகூட பாடப்புத்தகங்களில் ஆங்காங்கு சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் அமைக்கப்பட்டிருக்கும் குழு ஆராய்ந்து முறையோடு சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.